# ஸம்ஸ்க்ருதத்திற்கு சரியான ஒரு லிபியின் அவசியம்

நமது ஸம்ப்ரதாயங்களில் ஸம்ஸ்க்ருத மொழியின் முக்கியத்துவத்தை நாம் அறிவோம். தமிழும் தெய்வீக மூலம் கொண்ட மொழியானாலும், தெய்வங்களைத் தமிழில் ஆசையுடன் துதித்தாலும், தொன்றுதொட்டு **அனுஷ்டானங்களை ஸம்ஸ்க்ருதத்தின் அடிப்படையில் நம் முன்னோர்கள் செய்திருக்கிறார்கள்**.

ஸம்ஸ்க்ருதத்தில், குறிப்பாக **அனுஷ்டானத்தில் ஒலி/உச்சரிப்பு மிக முக்கியம்** என்பதை நாம் அறிவோம். ஆகவே அனுஷ்டானத்திற்கான ஸங்கல்பம் ஶ்லோகங்கள் முதலியவற்றை **சரியானதொரு லிபியில்** எழுதவோ படிக்கவோ வேண்டும்.

தமிழ் மொழியை எழுதப் போதுமான வரிவடிவங்கள் தமிழ் லிபியில் உள்ளன. ஆனால் **ஸம்ஸ்க்ருதத்தில்** அதிக ஒலிகள் இருப்பதால் அதனை **எழுத அதிக வரிவடிவங்கள் தேவைப்படுகின்றன**. இதற்காகவே பழைய காலத்திலிருந்து க்ரந்த லிபி இருந்து வருகிறது. இக்காலத்திலோ தேவநாகரி ப்ரபலமாக உள்ளது.

தற்சமயம் **தமிழ் லிபியில்** பிற மொழி ஒலிகளைக் குறிக்க ஜ (ஶ) ஷ ஸ ஹ க்ஷ ஸ்ரீ ஆகிய (க்ரந்த) வரிவடிவங்கள் மட்டும் பயன்பாட்டில் உள்ளன. மேலும் தமிழ் **வல்லின வரிவடிவங்கள் க ச ட த ப ஐந்து மட்டுமே** உள்ளன. ஆனால் ஒவ்வொன்றுக்கும் நான்கு நான்காக **ஸம்ஸ்க்ருதத்தில் இருபது வல்லின ஒலிகள் உள்ளன**. அவ்வாறே **ரு லு போன்ற சிறப்பு உயிர் ஒலிகளையும் அனுஸ்வாரம் விஸர்க்கம் என்ற ஒலிகளையும்** குறிக்க தமிழ் லிபியில் **வரிவடிவங்கள் இல்லை**. ஆகவே தமிழ் எழுத்தை மட்டும் கொண்டு ஸம்ஸ்க்ருதத்தைச் சரியாக குறிக்க இயலாது.

குறிப்பாக வல்லின எழுத்துக்களுடன் க$_2$ க$_3$ க$_4$ என்று எண்களைப் பயன்படுத்தும் வழக்கம் பிற்காலத்தில் ஏற்பட்டது. ஆனால் இந்த எண்களைக் கண்டுகொள்ளாமல் தமிழ் முறைப்படி படித்தால் ஒலிகள் மாறிவிடும் வாய்ப்பு அதிகம் உள்ளது. கோ$_3$பால என்பது கோ$_1$பா$_3$ல என்று ஒலிக்கும். பெரும்பாலானோர் இப்படித்தான் செய்கின்றனர்.

ஆகவே ஜ முதலியவற்றைப் போல் **மற்ற ஒலிகளுக்கும் அவைகளது க்ரந்த வரிவடிவத்தையே பயன்படுத்துவது** அர்த்தமுடையதாகிறது. இந்த தமிழ்+க்ரந்தம் கலந்த முறையிலும் நமது கோப்புகளை வெளியிட்டு வருகிறோம்.

க்ரந்தம் அல்லது தேவநாகரி என்ற முழு லிபியைக் கற்பதை விட **இந்த கலந்த முறைக்காக சில வரிவடிவங்களை மட்டும் கற்பது மிகவும் எளிதாகும்**. மனமிருந்தால் மார்க்கம் உண்டு. முடியாது என்று நினைக்கவேண்டியதில்லை.

ஆகவே **இந்த தமிழ்+க்ரந்தம் கலந்த முறையிலோ அல்லது முழு க்ரந்தம் அல்லது தேவநாகரி லிபியைப் பயன்படுத்தியோ ஸம்ஸ்க்ருதத்தை வாசிப்பதே சிறந்தது என்று வலியுறுத்துகிறோம்**. ஆகவே இயன்றவரை அந்த கோப்புகளையே பயன்படுத்தவும். இருப்பினும் பலரின் வேண்டுகோளுக்கிணங்க நடப்பு தமிழ்+234 முறையிலும் கோப்புகளை வெளியிட்டு வருகிறோம்.








ஶ்ரீ-வேத$^3$வ்யாஸாய நம:

ஶ்ரீமத்$^3$-ஆத்$^3$ய-ஶங்கர-ப$^4$க$^3$வத்பாத$^3$-பரம்பராக$^3$த-மூலாம்நாய-ஸர்வஜ்ஞ-பீட$^2$ம்
ஶ்ரீ-காஞ்சீ-காமகோடி-பீட$^2$ம்
ஜக$^3$த்$^3$கு$^3$ரு-ஶ்ரீ-ஶங்கராசார்ய-ஸ்வாமி-ஶ்ரீமட$^2$-ஸம்’ஸ்தா$^2$நம்

# ஸூர்ய-அர்க்$^4$ய-ப்ரதா$^3$நம்

## பெண்கள் ஸூர்யனுக்கு அர்க்யம் கொடுக்கும் முறை

ஸ்நானம் செய்து சுத்தமான வஸ்த்ரம் திலகம் முதலியவற்றைத் தரித்து, தீர்த்த பாத்ரத்தில் சுத்தமான ஜலத்தை எடுத்துக் கொண்டு பக்தியுடன் **தினமும் மும்முறை** அனுஷ்டிக்க வேண்டும்.

காலை **கிழக்கு** நோக்கியும் மாலை **மேற்கு** நோக்கியும் செய்ய வேண்டும். மதியத்துக்கு உச்சிக்காலம் வரை கிழக்கு நோக்கியும், தாண்டிவிட்டால் மேற்கு நோக்கியும் செய்ய வேண்டும்.

முதல் ச்லோகத்தினால் ப்ரார்த்தனை செய்யவும். இரண்டாவது ச்லோகத்தை மூன்று முறை சொல்லி ஒவ்வொரு முறைக்கும் அர்க்யம் விடவும்.

**அர்க்யம்** என்பது இரு கைகளையும் சேர்த்து குவித்து உள்ளங்களை மேல்நோக்கி வைத்துக்கொண்டு அதில் ஜலம் எடுத்து பக்தியுடன் விடுவது.

### செய்யத் தகுந்தவை மற்றும் கூடாதவை

நதி முதலிய நீர்நிலையிலோ சுத்தமான நிலத்திலோ அர்க்யம் விட வேண்டும். சௌகரியப்படாவிடில் தாம்பாளம் போன்ற பாத்திரத்தில் விட்டு பிறகு வேறு சுத்தமான இடத்தில் சேர்க்கலாம்.

அர்க்யமாக விடப்பட்ட நீர் பிறகு அழுக்கு நீருடன் சேரக்கூடாது, காலில் படக்கூடாது. கால் படும் இடத்தில் தெறித்தால் துடைத்துவிடவும்.

இதற்கு மட்டுமின்றி எந்த அனுஷ்டானத்திற்கும் பயன்படுத்தும் பாத்திரங்கள் தாமிரம், பித்தளை போன்ற ஸம்ப்ரதாயமான உலோகங்களில் இருக்க வேண்டும். எவர்சில்வர் போன்றவை அல்ல.

தீட்டுகள் ஏற்பட்டால் ஸூர்யனுக்கு மனதால் ப்ரார்த்திக்கலாம் ஆனால் செய்வதை தீட்டு விலகி சுத்தியான பிறகே செய்ய வேண்டும்.

### ஶ்லோகங்களின் பொருள்

**ப்ரார்த்தனை:** ஹே ஸூர்யனே வாரும்! நீர் ஆயிரம் கதிர்கள் கொண்ட ஒளிப்பிழம்பானவர்! நீர் உலகின் அதிபதியானவர்! பகலவனே! எனது பக்திக்கு கருணை காட்டி எனது அர்க்யத்தை ஏற்பீர்!

**அர்க்யம்:** அநேக கிரணங்கள் கொண்டு ப்ரகாசிக்கும் பரம்பொருளே! உமது தேஜஸ் எவ்விடமும் வியாபிக்கிறது. நீர் உலகை ஸ்ருஷ்டித்தவர், தூய்மையானவர், உலக நடப்புகளுக்கு ஸாக்ஷியானவர், உலகோரின் வினைப்பயன்களை அளிப்பவர். அத்தகைய உமக்கு வந்தனம்!

## ॥ப்ரார்த2நா॥

ஏஹி ஸூர்ய ஸஹஸ்ராம்'ஶோ தேஜோராஶே ஜக3த்பதே|
அநுகம்பய மாம்' ப4க்த்யா க்ரு'3ஹாணார்க்4யம்' தி3வாகர||

## ॥அர்க்4ய-ப்ரதா3நம்॥

நமோ விவஸ்வதே ப்3ரஹ்மந் பா4ஸ்வதே விஷ்ணுதேஜஸே|
ஜக3த்ஸவித்ரே ஶுசயே ஸவித்ரே ப2லதா3யிநே||
(ஏவம்' த்ரி:)


9884655618 8072613857 vdspsabha@gmail.com vdspsabha.org